# இந்து சாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூசு] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷம் கார்த்திகை மீ உஎ உ வெள்ளிக்கிழமை (12 Dec. 1952) [இல - கூஎ]


# சமூக நலனுக்கு ஒழுக்கம் வேண்டும்!

## தன்னலம் அஃதின்மையைக் காட்டும்

### ஒழுக்கமாவது யாது?

ஒழுக்கம் ஒரு சித்தாந்தமோ மதமோ அல்ல: அதனைச் சிறந்த வாழ்க்கை முறை அல்லது நன்னடக்கையின் வரம்பு என்றுகூறலாம். ஒழுக்கம் சமூகத்தின் அங்கமாகவுள்ள ஒவ்வொரு மனிதனது முயற்சியையும் செயலையும் நெறிப்படுத்தி அவன் சிறந்த முறபோக்கை அடைவதற்குத் துணை செய்வதோடு அவனது வாழ்க்கையை அழகும் இன்பமும் பயனும் நிறைந்ததாகவும் அமைக்கிறது.

### ஒழுக்க உணர்வின் உதயம்

இவ் ஒழுக்கஉணர்வு யாக்தர் உள்ளத்தில் இயற்கையிலே தானுக அரும்புவதில்லை. ஒரு குழந்தையை அது பிறந்த போதே மக்கள் இனத்திலிருந்து பிரித்துத் தனியாக வளர்த்து வந்தால் அது ஒழுக்கத்தைக் குறித்த சிந்தனை எதுவுமின்றி விலங்குகளைப்போலவே வளர்ந்துவரும். பின்னர் அக்குழந்தையை அதன் பெற்றோர்களிடையே வாழ்க தவரச் செய்தால் அது அவர்களுடைய ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுகிறது. அவ்வாறன்றி அதனைத் தூரதேசத்திற்கனுப்பிப் புதியதோர் சூழ்நிலையில வாழ்ந்து வரச்செய்தால் அது அங்குள்ள மக்களின் ஒழுக்க முறைகளைச் சிறிது சிறிதாக உணர்ந்து மேற்கொள்ளுகிறது. இதனால் இனத்தோடு சேர்ந்து வாழும் நிலையிற்றான் மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பற்றிய உணர்வு உதயமாகிறதென்றும் அவ்வுணர்ச்சியும் வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறு வேறுபடுகிறதெனறும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

### ஒழுக்கத்துள் அடங்கும் பண்புகள்

உலக வழக்கிலே ஒருவனை ஒழுக்கமில்லாதவன் என்று சொன்னுல் அவன் அயல மாதர்களிடம் முறைகேடாக நடந்து கொள்வதையே நாம முக்கியமாக எண்ணுகிறோம். ஆனல் ஒழுக்கம் என்பது இவ்வொரு பண்பினுள் மட்டும் அடங்கியிருக்கவில்லை. நமது முன்னேர்கள் பொய், களவு, சூது, கள்ளுண்டல் காமம, கொலை என்பனவற்றை மாபாதகங்கள் என்று பழித்து வந்தார்கள். இக்கொடிய செயல்களைப் புரிபவர்கள் வேறு எத்தகைய தகுதிகளைப் பெற்றிருந்த போதிலும் ஒழுக்கமில்லாதவர்கள் என்று பழிக்கப்பட்டு நன்மக்கள் வெறுப்புக்கும் அரசாங்கத் தண்டனைக்கும் ஆளாகிப் பல துன்பங்களை அடைவார்கள்.

இனி ஒருவனை ஒழுக்கமுடையவன என்று சொல்லவேண்டுமானல் ஆன்றோரால் பழிக்கப்படும் இக்குறைகள் அறவே இல்லாமல் இருப்பதோடு மேலும் பல நற்குணங்களும் நிரம்பியவனுதல் வேண்டும். அவை அன்பு, இன்சொல், ஈகை, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், இனங்காத்தல, தீவினையச்சம். செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, பண்புடைமை, கற்பு, மானம முதலியனவாம். மேற்கூறிய நற்பண்புகள் அமையப் பெறாத காரணத்தால் ஒருவன் அரசாங்கத் தண்டனைக்கு ஆளாகப் போவதில்லை. எனவே இவற்றைச் சட்ட நியதிக்குப் புறம்பான ஒழுக்கம் (Non-legal-virtues) எனறு கூறலாம். இவ்வொழுக்கங்களைப் பெரும்பாலோரும அத்துணை முக்கியமாகக் கருதுவதில்லை. அவற்றை மீறி நடப்பதைப் பெருங் குற்றமாகவும் எண்ணுவதில்லை. அதனல சமூக வாழ்வில நேரிடுகின்ற சீர்கேடுகள் பலவாம. இவ்வுண்மையை உணர்ந்தே நம் முன்னேர்கள் அப்பண்புகளனைத்தையும் நல்லொழுக்கத்தில் அங்கமாகவே புறத்திக்கூறியுள்ளார்கள். இதிலிருந்து ஒழுக்கம என்னும சொல் மிக விசாலமான பொருளையுடையது என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஒழுக்கம் என்ற சொல்லை ஓர் இலக்கணத்துக்குள் வரையறை செய்வது எளிதல்ல. வாய்மை, இன்சொல் முதலிய பண்புகளுக்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர் ஒழுக்கத்திற்கு இலக்கணம் கூருது செல்கின்றார். திருக்குறளுக்கு உரை இயற்றிய பரிமேலழகர் "ஒழுக்கமுடைமையாவது, தத்தம் வருணத்துக்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்" என்று பொருள் கூறுகின்றார். இக்கருத்து வள்ளுவர்க்கும் உடன்பாடானதன்று என்பதை,

ஒழுக்க முடைமை குடிமை
இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 132

என்ற அவர் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மேலும்,

ஒழுக்க முடையவர்க்
கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற்
சொலல். 139

ஒழுக்காறாக் கொள்க
ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு 161

என்னும் குறள்களில் தீய சொல் வழங்காமை, அழுக்காறாமை ஆகிய பண்புகளையும் ஒழுக்கத்தின் பகுதியாக வள்ளுவர் கூறுவதிலிருந்து ஒழுக்கம் என்னும் சொல்லின் விசாலத்தை அவரும் உடன்படுகின்றார் என்பது தெளிவாகிறது.

### ஒழுக்கமும் இயற்கை உணர்ச்சியும்

மனிதன் இயல்பிலே தன்னலம், முரண், பகைமை முதலிய பண்புகளை உடையவனுக இருக்கின்றான். அவன் வாழும் உலகமும் வாழ்க்கைக்காகப் போராடும் ஒரு போர்க்களமாகவே காணப்படுகிறது. வாழ்க்கைப்போருக்குத் தகுதியுள்ளவனே அழியாமல் நிலைத்து வாழக்கூடும். Survival of the fittest என்பது ஒரு நியதியாகும. ஆகவே மனிதன் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு மேற்சொன்ன பண்புகள் கூர்ந்திருத்தல் மிக இன்றியமையாததாகும். ஆனல் ஒழுக்கமோ அவ்வியற்கைப் பண்புகளுக்கு முரணுக உள்ளது. அது மனிதனது உணர்ச்சிகளுக்கு வரம்பு கோலி நெறிப்படுத்தப் பார்க்கிறது. ஆனல் மனிதன் தன்னலத்திற்காகத்தான் செய்யும் வாழ்க்கைப்போருக்கும் ஒரு தடையாக எண்ணுகிறான். ஆகவே அவ்வொழுக்க விதிகளை மீறுவதற்கே அவன் உள்ளம முறபடுகிறது.

இது மனித இயல்பில் ஓர் அம்சம். அதன் மற்றோர் அம்சத்தையும் நாம் எண்ணுதல் வேண்டும். மனிதன தன்னலம் முதலிய பண்புகளை உடையவனயினும் தன்னந்தனியாக வாழ்வது அவனது இயற்கையல்ல. அவன் சமூகமாக வாழ்கின்ற ஒரு ஜீவி. மிகப் பழங்காலமுதலே அவன் இனத்தோடு சேர்ந்து சமூகமாகவே வாழ்ந்து வந்திருக்கிறான் அவ்வாறு வாழ்வது கொடிய விலங்குகளினின்று தன்னைக் காத்துக்கொள்வதற்கும வாழ்க்கையில் நேரிடுகின்ற பல இன்னல்களைப் போக்குவதற்கும இன்றியமையாததாயிற்று. இத்தகைய

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

**மாதோடு மகிழ்ந்து வருவார் விடை மேல்!**

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரர்க்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

திருச்சிற்றம்பலம்.

---

# புயலால் நேர்ந்த பெரு விபத்து

## மந்திரிமாரின் அறிக்கை

யாழ்ப்பாணப் பெரும் பகுதியில் நேர்ந்த பெரும் புயலினல் விளைந்த பலவகையான அனர்த்தங்களை நேரில் வந்து பார்த்தவர்கள் பாராளுமன்றத்து மந்திரிமார்களாகிய திருவாளர்கள் H. de Z சிறீவர்த்தன, G. G. பொன்னம்பலம, S. நடேசன் Dr. M. C. M. கலீல் என்னுமிவர்களும சாவகச்சேரிப் பகுதிப் பிரதிநிதியாகிய திரு. V. குமாரசுவாமியுமாவார்கள். இவர்கள் புயல் காரணமாகத தாங்கள் நேரிற் பார்த்த பலவகையான சேதங்களைப்பற்றி அறிக்கையிட்டுள்ளனர். அதன சுருக்கம் வருமாறு:—

"சென்றவாரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடித்த பெரும்புயலால் நேர்ந்த பலவகையான சேதங்கள் முன் எக்காலத்திலும் நேர்ந்ததில்லையெனலாம். எங்கும் நேர்ந்துள்ள பலவகையான பயிரழிவும பரிதாபமானது; இக்கடுங் காற்றினல் இங்குள்ள மக்களுற் பெருங் கஷ்டநிலையை அடையலாயினர்; மழையோடு கூடிய இதப் பெருங்காற்று வீசுவதற்கு முன்னுட்டானும யாழ்ப்பாணக் குடாநாடு நல்ல வளமான நிலைமையிலிருந்ததென்பதை, இவ் வழிவைக் கொண்டு நாம் யூகித்துக்கொள்ளலாம்.

கடற்கரைப் பகுதியில் வசித்த பரதவக் குடிகளுக்கு நேர்ந்த சேதங்கள் பயங்கரமானவை! அவர்கள வசித்த குடிசைகள் பெருங் காற்றினுற் சுதைந்து போய்விட, அவர்களுடைய தொழிலுக்குரிய கருவிகளும கட்டுமரங்கள முதலியனவும் சேதமுற்றன; பலர் இருக்க ஒதுக்கிடமின்றி இடைஞ்சற்படுவதை நேரிற் பார்த்தோம்; இவை மாத்திரமல்லாமல காங்கேசன் துறை, பருத்தித்துறையைச் சேர்ந்த கடற்கரைத் தெருவின் பல பாகங்களைக் கடற்றிரை அள்ளிப் போக்கு வரவைத் தடை செய்துவிட்டது; சில இடங்களில் கடல்பெருகி வெள்ளம உள்நாட் புகுந்து பெருஅழிவு செய்துவிட்டது. கடலுக்கும் தெருவிற்கு மிடையில் இருந்த நிலத்தைப பலவிடங்களில் இப்பொழுது காணவில்லை

இந்தச் சேதங்களையும் நஷ்டத்தையும்உடனுக்குடன் ஒழித்துக் குடிசனங்களைப் பழையநிலையிலவசிக்கச்செய்வதெவ்வாறென்பது புலப்படவில்லை. பலநூற்றுக்கணக்கான மக்கள் தங்கள்இல்லங்கள் சிதைந்துபோக, இருக்க வீடின்றித் தவிக்கிறார்கள்! இவர்களுக்குச் சமயோசிதமாக ஏதும ஒதுக்கிடங் கொடுப்பதற்குத்தானும் என்ன செய்வதென யோசிக்க வேண்டியிருக்கிறது. கடலோரத்தில் வசிக்கும் மக்கள் கடலோரத்திற்றனே வசிப்பதற்காகிப் ஒழுங்குகளை அரசினர் விரைவிற செய்துவைக்க வேண்டியிருக்கிறது.

மாஞ்சடி முதலியவற்றின் அழிவைப் பார்க்குமிடத்தில், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களில 95 விகிதமான வாழைகள் அடியோடழிந்தன; மாவள்ளிக்கும அதிக சேதம் நேர்ந்ததெனறு எண்ணக்கிடக்கின்றது. வெற்றிலை ஏனைய காய்கனி வர்க்கங்களுக்குரிய மாஞ் செடிகளுக்குப் பெரும் சேதம நேர்ந்துளளது. கடல் நீரும், மற்றை நீர் நிலைகளின உப்புநீரும பெருகி வயல்களுட் புகுந்து நெற்பயிருக்கு அழிவு செய்துவிட்டன. ஆயிரக்கணக்கான மா, பலா, புளி, தென்னை முதலிய மரங்கள் முற்றும் வேர்பறித்து விழ்ந்தும சேதமுற்றன; இப்படி வீழுமபோது அயலிலுள்ள வீடுகள கட்டடங்களைத தகர்த்தும் சிதைத்தும் அழிவுசெய்துவிட்டன. மாடு ஆடு முதலாம் பிராணிகளும் கணக்கின்றி மாண்டன. தொகுத்துச் சொல்லுமிடத்து, இந்தப் பகுதியிலே அழிவு மாறிப் பழைய நிலைமை வருதற்குக் குறைந்தது இரண்டு வருடகாலஞ் செல்லுமெனலாம. பொருட்சேதம் எவ்வளவென்று இப்போது கணக்கிட முடியாது; ஆனல இலட்சக் கணக்கான ரூபாச் சேதமென ஒருவாறு மதிப்பிடலாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தனஹு கார்த்திகைமீ
உஎ உ வெள்ளிக்கிழமை

## விளைவி - விளைந்ததைத் தொடாதே!

=O=

பந்தா பூலோகமா என்கிறார் விவசாய உணவுப் பகுதி மந்திரியார். இவ்விதமாகச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தாளம் போடுவதில் நிபுணர் என்பது அரசியல் வட்டார அபிப்பிராயம். 'உணவுப்பஞ்சம் வந்துவிட்டது, உயிரும் உடம்பும் ஒருங்கிருக்க வேணடுமேயானல் ஓடி வாருங்கள் ஏரை எடுங்கள், உழுங்கள், பயிரிடுங்கள், எல்லாரும்வாருங்கள்' என்று அழகாக அன்பாக எடுத்துரைத்தார் உணவு மந்திரி. பயிரிடுவோர் காடுவெட்டிக் கழனியாக்கிக் கமஞ்செய்து நெல்லுக் குவித்ததைக் கண்டார். ஆனல் அவர்களுக்கு வடபகுதிதான் புலப்பட்டது. உத்தர திசையிலேதான் உக்கிரபார்வை சென்றது. உள்ளத்தில் என்னதான் உணர்ச்சி கொண்டாரோ அறியேம். உடனே தடையுத்தரவு பிறப்பித்தார். இவ்வகையாக அவசரச் சட்டம் ஆக்குவதில் யுத்தகாலத் தேர்ச்சி பெற்றவர் அல்லவா? மாங்குளம் மடுரேட்டு என்கிற வடமாகாணப் பட்டினங்களை எல்லையாகவைத்து அவற்றுக்கு வடக்கே அரிசியாவது நெல்லாவது எவரும் கொண்டுசெல்ல வேண்டுமேயானல் அரசாங்கத்தாரின் உத்தரவு பெற்றே செய்யவேண்டுமென்று கட்டளை பிறந்தது. இதுதான் நடந்திருக்கிறது என்ருல் இனி எதுதான் நடக்காது?

நாட்டாண்மைக்காரர் நாட்டுப்புறங்களிலேபொது சனங்களை வெருட்டித் தங்கள் விருப்பத்தின்படி காரியங்களைச் செய்விப்பது போல அரசாங்கம் நடந்துகொள்ளத் துணிந்து விட்டது போலும்; இன்றேல் இவ்விதமான நியாயம் நீதியற்ற செய்கையைச்செய்து விட்டது மல்லாமல் அதற்குக் குள்ளத்தனமான சமாதானங் கூறவுந் தலைப்படுமா? இல்லையேல் இந்தியாவுக்கு இலங்கையி லிருந்து அரிசி நெல்லுக் கள்ளத்தனமாக அனுப்பப்படுவதைத் தடுக்கவே இந்தக் கட்டுப்பாட்டை விதித்திருக்கின்றோம்; இதனல் ஒரு குறையுமில்லை; கேட்ட நேரமே கமக்காரர்களுக்கு உத்தரவுச் சீட்டுகள் கொடுபடும் என்று மந்திரியார் சொல்லுவாரா?

இலங்கைத் தீபகத்திலே நெல் விளையும் நிலங்கள் எப் பாகத்திலும் இருக்கவும் இந்நாட்டிலிருந்து இந்திய தேசத்திற்குக் கள்ள மார்க்கமாகப் போகக்கூடிய துறைகள் எம்மருங்கும் பொலிந்து கிடக்கவும், வடபாலிருந்துதான் கள்ள வியாபாரம் நடைபெறுகிறதென்று துணிந்து சொல்லுகின்றவர்கள் நியாயம் நீதிக்கமைவார்களா? மாங்குளத்திலிருந்தும் மடுரேட்டிலிருந்தும் கிழக்கும் மேற்கும் தெற்கும் அரிசி நெல்லுக் கொண்டு போகின்றவர்கள் அவற்றை இந்தியாவுக் கனுப்ப முடியாதா? அவ்வாறவர்கள் செய்தால் அது தடுக்கப்பட வேண்டாமா? மரமிங்கே பூவங்கே என்றங்கு வடபாலுள்ளவர்கள் பயிர்செய்து பெற்ற தானியங்களைத் தென்பாலனுப்பலாமே யன்றி மற்றையோர் எடுத்துச் செல்லுதல் தடைபட வேண்டிய காரணந்தான் என்னையோ?

'சோழநாடு சோறுடைத்து' என்ற நெல்விளை நிலமுடைத்தாய தென்னிந்தியாவிலே அரிசி குறைந்த விலைக்குப் பெறக்கொளளத் தக்கதாயிருக்க, அதிகப்படியான விலை பெறும் இலங்கை அரிசியைக் கள்ளமாகக்கொண்டு செல்லத் துணிபவர்கள் மூளைக் குழப்பமுள்ளவர்களாகவே யிருக்க வேண்டும். இவ்விதமான அசம்பாவித சமாதானங்களைச் சொல்லி ஆறுதல் அளிக்கும அமைச்சர் வடபகுதிக் கமக்காரரை மூடர்கள் என்று நினைத்துவிட்டார் போலும்! அவ்வளவுதானு? வேண்டிய மட்டும் விலலங்கமின்றி உத்தரவுச் சீட்டுப் பெறலாம் என்கிறுர். ஆக்கிய சோற்றை உண்ணவும் இவ் வமைச்சரது உத்தரவு வேண்டுமென்று இனிமேற் சொல்லுவார் போலும? என் உத்தரவு தாராளமாகத் தருவோம் அதில் என்ன இடைஞ்சல்? என்று ஆறுதல் அளிப்பார் போலும்.

உத்தரவுச்சீட்டுகளும் அவற்றைப் பெறுதலும் என்ருல் இலங்கை அரசாங்கத்திடம் பழகினவர்களுக்கே தெரியும்! அதிலும் யுத்தகால நெருக்கடிக் கட்டுப்பாடுகளின்போது உத்தரவுகள் கொடுத்தவர்கள் கொடுக்க உதவி செய்தவர்கள் என்ற வகையிலுள்ள வனையவர்கள் யுத்தம் நின்றுவிடுமோ என்ற நெஞ்சிடியோடு எவ்வாறு ஊரவர்களுக்கு உதவினர்களோ அவ்வாறு இப்பொழுதும் உத்தரவுச் சீட்டுகளை நியாயமான முறையிலே வழங்குவார்கள் என்று சொல்லவும் வேண்டுங்கொல்! உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் நிலையத்துக்கும் கமத்துக்கும் இடையே பல நாள் நடந்து பல செருப்புகள் தேய்ந்து சுண்டங்காய் காற் பணம் சுமை கூலி முக்காற் பணம் என்ற விதமாக 'உத்தரவு' பெறுவதிலே காலத்தையும் கையிருப்பையும் கழித்துவிடுவது மாடமாளிகையி லிருந்து அறுசுவை யுண்டியும் அசுவப் பந்தயமும் களிக்கும் அமைச்சர்குழாத்தினர்க்கு ... அவர்களுக்கு ஒரு சி... யாகவே தோற்றும்.

# நாடெங்கும் நாவலர் தினம்

### சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலையில்

சைவஉலகில் புகழ்ஒளி பரப்பித் தம் பூதவுடல் அழியினும் புகழ் உடலை அழியாவண்ணம் நிறுத்திய நாவலரவர்களின் 73-வது குருபூசை (8-12-52) அன்று அவர்கள் சிதம்பரத்தில் தோற்றுவித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. காலையில் திருவுருவப்பட வழிபாடும், சிதம்பர நடராஜ மூர்த்திக்கு விசேஷ பூசையும் நடைபெற்றன. மாலையில் நூற்பதிப்புச் சங்கத்தலைவர் உயர்திரு. J. M. சோமசுந்தரம்பிள்ளை B. A. B L. அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் A. R இராமசாமிப்பிள்ளை M. A. அவர்களும் தத்துவப் பகுதி விரிவுரையாளர் C. இராமலிங்கம்பிள்ளை M. A. அவர்களும் நாவலர் பெருமான் என்னும் பொருள்பற்றிச் சிறந்த சொற்சொற்பொழிவு ஆற்றினர்கள். நாவலர் நினைவுநாட் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

X X X

### யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில்

(8-12-52) முதலியார் C. முத்துத்தம்பியவர்கள் தலைமையில் திரு பொ. கருணாகரன் அவர்கள் நாவலரைப்பற்றிப் பேசும்பொழுது நாவலர் பெருமான் வேத சிவாகமங்களை முதல் நூலாகப் போற்றிக்கொண்டு சைவமக்கள் அவற்றிலே விதிக்கப்பட்டவைகளை அனுட்டிக்க வேண்டுமென்றும் விலக்கப்பட்டவைகளைத் தவிர்க்கவேண்டும் என்றும் பிரசாரஞ் செய்து வந்தாரெனவும் புதிய கொள்கைகள் ஒன்றையும் பரப்பவில்லை யெனவும் பிழைகளைக் கண்ட இடத்தில் எடுத்துக் காட்டும் வீரம் படைத்தவரெனவும் போலி ஆசார ஒழுக்கங்களைக் கடிந்தாரெனவும் கூறினர்.

ஏழாலை திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் நாவலர்பெருமான் மீண்டும் நமது நாட்டில் வந்துதிக்கச் சைவ மக்கள் தவஞ்செய்ய வேண்டுமெனவும் அவ்வாறுதித்தாற்றான் நமது நாட்டில் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும இப்பொழுது காணப்படும் பகைகள் நீங்குமெனவும் கூறினர்.

திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள்; திரு. சி. நாகையா அவர்கள், சைவ பரிபாலனச் செயலாளர் திரு. அ அருளம்பலம் அவர்கள் குறிப்புரை கூறினர்கள். சபைத் தலைவர் அவர்கள் தமது குறிப்புரையில் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் தோன்றிய காலத்தில் யாழ்ப்பாணத்தின்கண் உள்ள புறச்சமய இருள் "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்" காலத்தில் பாண்டி நாட்டிலே காணப்பட்ட சமணவிருளிலும் பார்க்கக் கொடியதெனவும் இப்பொழுது நமது சமயத்தைப் பாதிக்கும் இருளானது அவற்றிலும் பார்க்கப் பன்மடங்கு கொடியதெனவும் அதற்குக் காரணம் சைவமக்கள் நாவலர் பெருமானுடைய பெருமையை உணராததேயெனவும் கூறினர். சமயப் பிரசார அமைச்சர் நன்றிகூறக் கூட்டம் நிறைவுற்றது.

X X X

### மறவன்புலோவில்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் மறவன்புலோ கி. மு. சங்கம், ச. ச. நிலையம், பெ. ஆ. சங்கம் ஆதரவில் நடந்த கூட்டத்தில் திரு க. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் செல்வி க. நாகம்மா திருவாளர் க. கனகசபை திரு. நா. காங்கேசு ஆசிரியர் திருவாளர் வ. பொன்னையா அவர்கள் திரு. நா. பொன்னம்பலம் ஆசிரியர் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் தலைவர் அவர்களின் நிறைவுரை நன்றியுரையுடனும் தேவாரபாராயணத்துடனும் கூட்டம் இனிது நிறைவேறியது.

இதற்கு மேல் நாம் கூற வேண்டியதொன்றுமில்லை. ஒன்றில் இலங்கையெங்கணும் இந்தவிதமான கட்டுப்பாடு கொண்டு வரப்பட வேண்டும் இல்லையேல் மடுரேட்டிலும் மாங்குளத்திலும் உள்ள கட்டுப்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் உடனே தவிர்க்கப்பட வேண்டும்! 'சனநாயக ஆட்சி' என்று தம்பட்டங் கொட்டும் அரசாங்கம் இவ்வாறு (தான்தோன்றித்தனமாக) செய்த பிழையைத் திருத்துமென்றே நம்புகிறேம். வட... ... இல் ...கின்ருர்களா?

மதிப்புரை

விரும்புவோர் தங்கள் புத்தகங்களில் இருபிரதிகள் அனுப்புமாறு வேண்டுகிறேம்.

ப—ர்.

### சனசமூக நிலையங்களின் தகுதி

சனசமூக நிலையங்கள் தகுதிக்கேற்ப மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுமென்றும் அவற்றுட் சிறந்த தொண்டாற்றுவன முதலாம் பிரிவிலும குற்றமில்லாத தொண்டாற்றுவன இரண்டாம் பிரிவிலும தொண்டாற்றுவதிற் சோர்வுடையன மூன்றும் பிரிவிலும் இடம் பெறுமென்றும் அறியவருகின்றது.

அரசாங்க ஆண்டு நன்கொடைப் பணம் முதலாம் பிரிவு ரூபா 750 இரண்டாம் பிரிவு ரூபா 500.

### ஸ்ரீ மணிலால் காந்தி கைதியானுர்

தென் ஆபிரிக்க அநீதிச் சட்ட அமைப்புக்களை எதிர்த்த ஸ்ரீ மணிலால் காந்தி கைதியாயினரென அறிய வருகின்றது.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## நீர்வேலி - புயல் நிவாரண வேலைகள்

# தொண்டர்கள் வேண்டும்

நீர்வேலிக் கிராமம் கமக்காரர்கள் நிறைந்த இடம். வாழைப் பயிர் உற்பத்திதான் இந்தக் கிராமத்தின் உயிர் நிலை. 30-11-52ல் வீசிய கொடிய புயற் காற்றினல் வாழைத் தோட்டங்கள் அடியோடு நாசமாகி வெறும் காடாகக் காட்சி அளிக்கின்றன! இப் பெரிய அழிவைப்போல 25 வருட காலமாக இக் கிராமக் கமக்காரர் கண்டதும் இல்லை! இதனல் நீர்வேலிக் கமக்காரர் திகிலடைந்து ஏக்கமுற்று இருக்கிருன்ருர்கள்.

நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் ஆகிய கிராமங்கள் வாழைத் தோட்ட அழிவினுல் அந்தரிக்கின்றன. கமக்காரர்கள் பரம ஏழைகள். காய்-முதல் - பொத்தி சிறமட்டம் உட்பட எல்லா வாழைகளும் தரை மட்டமான காட்சி பெரிய பரிதாபம்.

இந்த பரிதாபமான நிலையில் உள்ள தோட்டங்களை சீர்திருத்தி வெட்டிக் கொட்டி துப்பரவு செய்து இலேசான காரியமல்ல. வாரத்துக்கு வாரம் வாழைக் குலைகளை விற்றுச் சீவிக்கும் கமக்காரர் கதி சொல்லும தரத்ததன்று! ஏழைக்கமக்காரர்களுக்குஉதவி அளிக்கக்கூடிய தொண்டர்களது சேவை வேண்டியுளளது. சுமார் 2 மாத காலத்துக்கு உதவி செய்யலாம். ஏழைக் கமக்காரர்களுக்கு நிவாரணமாகச் சரீர உதவி செய்யக்கூடிய தொண்டர்கள் உடனே தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பார்களாக. தொடர்ந்து உதவி செய்ய முடியாவிட்டாலும் தங்களுக்கு வசதியான காலத்தைத் தெரிவிப்பார்களாக. பாடசாலை ஆசிரியர்களும மாணவர்களும் சனி ஞாயிறு வாரங்களை இத்துறையில்உபயோகிப்பார்களாக. உத்தியோகஸ்தர்கள் விடுமுறைக் காலத்தை இத்துறையில் உதவுவார்களாக.

நிவாரண வேலைகளுக்கு உதவும் தொண்டர்களுக்குத் தங்க வசதி சாப்பாட்டு வசதி முதலியன இலவசமாகச் செய்து வைக்கப்படும். எல்லாவற்றிற்கும் தொண்டு மனப்பான்மையுள்ள அன்பர்கள் உடனே நமக்கு எழுதுமாறு பிரார்த்திக்கின்றேம்.

ஊழியன்,

சி. க. வேலாயுதபிள்ளை

சர்வோதய ஆச்சிரமம்,
கரந்தன்,
நீர்வேலி P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராய நீக்கம்

# "சமய ஒழுக்கம் நிலவ மது நீக்கம் வேண்டும்"

## "காந்தியடிகள் தொடங்கிய புனித இயக்கம்"

— திரு. C. வன்னியசிங்கம்.

### வாணன்புலம் கந்தசுவாமிகோவில் வீதி

சனிக்கிழமை 6—12—52 ல் ஆசிரியர் திரு. K. முத்துவேலு அவர்கள் தலைமையில் திரு. K. நவரத்தினம் அவர்கள் பேசும் பொழுது மதுவிலக்கு மகாசபையார் மக்களுள் ஒரு சாராருக்குத் தீமை விளைக்க முயலுவதாக வெளிவரும் கூற்றுக்களை மறுத்துரைத்து, கள்ளிறக்குவோர் முதலிய யாவருக்கும் சாராய நீக்கம் தரக்கூடிய நன்மைகளை விளக்கித் தமிழன் தமிழனாய் வாழ வேண்டுமானால் சமயாசாரம் நிலைக்க வேண்டுமானால் இம் முயற்சி சித்திபெய்த வேண்டும் என்று கூறினர்.

திரு. R. T. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் இவ் வட்டாரத்திலுள்ளார் தமிழ்ப்பண்பாட்டைக் கைவிடாது சமயாசாரப்படி ஒழுகுவோர், அத் தகையோர் மதுவால் விளையும் இடையூறுகளை நீக்க மதுவிலக்கு மகாசபையாருடன் ஒத்துழைத்து வெற்றி பெற வேண்டும் என்று கூறினர்.

திரு. த. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் பேசும்பொழுது கந்தபுராணம், திருக்குறள் ஆகியவற்றில் உதாரணங்கள் எடுத்துக் காட்டி மது பானம் விளைக்கும் இழிவை விளக்கி இப்பொழுது சாராயத்தை நீக்க யாவரும் முயல வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். வேண்டியன செய்ய ஒரு நிருவாக சபை அமைக்கப் பெற்றபின் திரு. பொ. அப்பாக்குட்டி அவர்கள் நன்றி கூறினர்.

### சாவகச்சேரிச் சந்தை

சாவகச்சேரிச் சந்தை வங்களாவில் ஞாயிற்றுக்கிழமை 7-12-52ல் திரு. V. கனகசபை அவர்கள் தலைமைவகித்து மதுவிலக்கு மகாசபையார் செய்யும் தொண்டைப் பற்றிச் சிலர் பிழையாகப் பிரசாரஞ் செய்வதை எடுத்துக் காட்டியபின், Dr. C. குருசாமி அவர்கள் பேசும்பொழுது இலங்கையில் இந்த வருடம் நடந்த 105 கொலைகளுள் 95 மதுபானம் விளைவித்தது என்பதையும் மதுபானத்தாலுண்டாகும் தீமைகளைப் பற்றி அமெரிக்க மனோ தத்துவ நிபுணரொருவர் கூறியவற்றையும் எடுத்துக் காட்டிச் சாராயத்தை அகற்ற உழைக்குமாறு யாவரையும் வேண்டினர்.

திரு. R. கனகசபை அவர்கள் மதுவிலக்கு மகாசபையார் செய்யும் தொண்டைப் புகழ்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவி புரிய வேண்டுமென்று கூறினர்.

பின்னர் திரு. K. நவரத்தினம் அவர்கள் பேசும்பொழுது குறிக்கப்பட்ட ஒருசாராருக்குத் தீமை விளைவிக்கவல்ல எம் நாட்டிலுள்ள தீய ஒழுக்கத்தை நீக்கி, பொருளாதார நிலையை விருத்தி செய்து தமிழ்ப் பண்பாட்டை நிலவச் செய்யவே மது விலக்குச் சபையினர் முயலுகின்றனர் என்பதை விளக்கினர்.

கோப்பாய்ப் பிரதிநிதி திரு C. வன்னியசிங்கம் அவர்கள் பேசும்பொழுது யாழ்ப்பாண நகரசபை மண்டபக் கூட்டப் பேச்சுக்களிலே தாம் கண்ட பிழையான எண்ணங்களைத் திருத்திப் பேசியதாகக் கூறியபின் மது விலக்கு இயக்கம் நாட்டுமக்களின் நன்மைக்காகக் காந்தியடிகளாலேயே தொடங்கப்பெற்று இந்தியாவிலே பெரும் பயனைத் தருகின்றதென்று எடுத்துக்காட்டிச் சாராய நீக்கத்திக்கு முயலும்படி மதிமொழி கூறினர்.

திரு. A. அமிர்தலிங்கம்அவர்கள் திருக்குறள் எடுத்துக்காட்டால் மதுபானத்தின் தீமையை விளக்கிச் சாராய நீக்கத்தை ஆதரித்துப் பேசினர்.

திரு. R. T. சுப்பிரமணியம் அவர்கள் அனுபவத்திற் கண்ட மதுபானத் தீமைகளை எடுத்துக் காட்டிப் பேசினர்.

---

## உடுவில் கிராமச்சங்கக் கேள்விப் பத்திரம்

உடுவில் கிராமச்சங்க இணுவில் மானிப்பாய் றேட்டு வேலையை ஒப்பந்தத்திக் கொடுக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள்:— மாதிரிக் கேள்விப் பத்திரங்கள் இவ் வலுவலகத்தில் மார்கழி மாதம் 10ம் தேதி வரையும் ரூபா 50/= கட்டிப் பெற்றுக் கொள்க. இப் பத்திரங்கள் பதிவு செய்யபபெற்ற ஒப்பந்தகாறருக்கு மாத்திரம் வழங்கப்படும்.

நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நன்றாக ஒட்டப்பெற்ற உறைகளிலிட்டு மேலும் தங்கள் முத்திரைகள் வைத்து 12-12-52 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு முன்னதாக இச்சங்கத் தலைவருக்கு "கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டுப் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இது பற்றிய வேறு விபரங்கள் தேவைப்படுவோர் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்க.

சி. மாணிக்கம்
தலைவர்.

உடுவில் கிராமச்சங்கம்,
சுன்ணாகம்,
25-11-52.

M. 187 9-12-52.

---

## நிலைய மாற்றம்

J. இலக்கும்புற L. D. S Ben தமது பல் வைத்தியத் தொழிலை யாழ்ப்பாணம் 1-ம் குறக்குத்தெரு 37-ம் இலக்க நிலையத்திலே தொடங்கியிருக்கின்றார்.

M 177 28, 5, 12, 19, 26

---

## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

---

திருத்தொண்டர் திருநாள்

# இன்னிசையால் அன்பு பெருகி அரனடி சார்ந்தார்

## ஆனாய நாயனார்

மழ நாட்டிலே மங்கலவூரிலே ஆயர்குலம் விளங்குமாறு திருவவதாரஞ் செய்தார் ஆனாய நாயனார். அவர் திருநீற்றை விரும்பிப் போற்றிச் சிவபெருமானுடைய திருவடிகளை மனமொழி மெய்களால் வணங்குவதன்றி மற்றொன்றையும் பேணுதவராய் வாழ்ந்தார்.

"ஆயர் குலத்தை விளக்கிட
வந்துத யஞ்செய்தார்;
தூய சுடர்த்திரு நீறு
விரும்பு தொழும்புள்ளார்;
வாயினின் மெய்யின் வழுத்து
மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னாடு பிரானடி
அல்லது பேணுதார்."

அவர் மற்றைய இடையர்கள் ஏவல்செய்ய அவர்களோடு பசுக் கூட்டங்களைக் காட்டுக்குக்கொண்டு போய் மேய்த்துக்கொண்டு திருவைந்தெழுத்தை விதிப்படி வேய்ங் குழலிலே ஏழிசையும் பொருந்த வாசித்துச் சரம் அசரம் ஆகிய ஆன்மாக்கள் எல்லாவற்றுக்கும் அருள் பொருந்திய இசையமுதை அளித்து வந்தார். ஒரு நாள் மற்ற இடையர்கள் பசு நிரைகளைச் சூழ்ந்து செல்ல அவர் கையிலே வெண்கோலும் வேய்ங்குழலுங் கொண்டு அவர்களுடன் காட்டுக்குச் சென்றார். அங்கே ஒரு கொன்றை மரத்தை யணைந்தார். அணைந்தபொழுது வாசனைபொருந்திய மலர் மாலையை யணிந்து தாழ்ந்த சடாமுடியையுடைய சிவபெருமானைப்போலப் பூங்கொத்துக்களைத் தாங்கிக்கொண்டு நின்ற கொன்றை மரத்தையுற்றுப்பார்த்து மனமுருகித் தம்மையுடையவர்மீது பொருந்திய சிந்தையின் அன்பு வெள்ளம் பாய மடைதிறந்து வைத்தார்.

"சென்றணைந்த ஆனாயர்
செய்தவிரைத் காமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி
மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறுங் கொன்றையினை
நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில் அன்பை
உடையவர்பால்மடைதிறந்தார்"

அவர் திருவைந்தெழுத்தை விதிப்படிவேய்ங்குழலிலேயமைத்து ஊதி வருமளவில், அன்பு ஊற்றெடுத்து மேலே பொங்குகின்ற இசை பொருந்திய குழலொலியால் உயிர்களெல்லாம் என்புருகிச் செயலற்று நின்றன. மெய்யன்பராகிய நாயனாரது குழலோசையானது வானம் பூமி எங்கணும் நிறைந்து பொய்யன்புக்கெட்டாத பொன்னம்பலத்திலே திருநிருத்தஞ் செய்தருளுகின்ற முதல்வருடைய திருச்செவியை யணுகியது. அவ்வோசையைக் கேட்டருளியதும் அருட் கருணையே திருவுருவாகிய பார்வதிதேவியாரோடு சிவபெருமான் இடபாரூடரா யெழுந்தருளிவந்து நாயனாரெதிரில் நின்று திருவருளைக்கஞ்செய்து மெய்யன்பனே எம்முடைய அடியார்கள் உன்னுடைய வேய்ங்குழலிசையைக் கேட்கும்பொருட்டு இப்பொழுது நின்றபடியே நம்பாலணைவாயென்று திருவாய்மலர்ந்தருளினர். நாயனர் வேய்ங்குழல் வாசித்தபடியே எம்பெருமானுடைய பக்கத்தில் நின்று திருக்கைலாச மலையை யடைந்தார்.

"முன்னின்ற மழவிடைமேல்
முதல்வனர் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர்
திருக்குழல்வா சனைகேட்க
'இந்நின்ற நிலையேநம்
பாலணைவாய்' என அவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார்
ஐயர்திரு மருங்கணைந்தார்.,'

---

# உங்கள் நக்ஷத்திரம்? — எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 14—12—52——20—12—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

வாரத்தின் முதல் மூன்று நாட்களும் அதிக தொந்தரவாயிருக்கும். மனச் சமாதானமிராது, சிறு அபாயங்களுக்கிடமுண்டு. புதன்கிழமை தொடக்கம் நிலைமை திருந்தும். முயற்சிகளில் முன்னேறக்கூடியதாயிருக்கும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்த வாரம் உத்தியோகத் தொந்தரவுகள் இரகசியப் பகைவர் தொந்தரவுகள் ஆகியவற்றைப்பற்றிக் கவனமாயிருக்கவும். புதன் வியாழன் வெள்ளி பொறுமையை ஒழிக்கக்கூடும். நண்பருடன் மனக் கசப்புக்குமிடமுண்டு. வார இறுதி சிறிது சமாதானத்தைத்தரும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.**

இறுதி இருநாட்கள்தவிர இந்த வாரம் உத்தியோகத்துறையிலும் குடும்பத்துறையிலும் அதிக உதவியாயிருக்கும். மனச் சமாதானமும் புகழும் நிச்சயம். வெள்ளி சனி கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்த வாரம் போட்டியிடுவோரை வெல்லக் கூடியதாயிருக்கும், வழக்கு வெற்றிக்கும் பணப்பேற்றுக்குமிடமுண்டு ஆனல் குடும்ப சமாதானமிராது.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இந்த வாரம் குடும்பத்தில் சுகவீனத்துக்கிடமுண்டு. உத்தியோகத்துறையில் பணத்துறையில் எல்லாம நன்று. போட்டிகளுள்ள வாரம். ஆனல் வெற்றியாய் வருவீர்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பண நிலைமை திருந்தியம் மனச் சமாதானமிராது. மனத் தொந்தரவுக்கு ஏதுவாயினும் ஒரு ஏது இருக்கும். தேக சுகவீனத்திக்கு விசேடமாய் வயிற்றுக் குழப்படிக்கு இடமுண்டு.

**துலாம் சித்திரை 3, 4ம பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

வண்டிகள் இந்த வாரம் அதிக செலவை உண்டாக்கும். சிறு அபாயங்களுக் கிடமுண்டு. நண்பர் அதிக உதவியாயிருப்பர். புது முயற்சிகளை முன்னேற்றுக.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்த வாரம் சகோதர சகோதரிகளின் தயவுக்கு இடமுண்டு. தனலாபத்துக்கு மிடமுண்டு. ஆனல் சண்டைகள் விரைந்து தொடரக் கூடும். வார இறுதிக்கு முன் சில உண்மையான நண்பரைக் கோபிக்கச் செய்யக்கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

இந்த வாரம் குடும்பத் தொடர்புகள் அதிகம் சமாதானமாயிரா. செலவதிகரிக்கும். கண்நோய்க்குமிடமுண்டு. ஆனல் ஆபத்தானது ஒன்றுமில்லை.

**மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

சிறிது காலத்துக்குத் தேக சுகவீனம் சிக்கலாயிருக்கும். விசேட தீர்மானங்கள் விரைந்து செய்ய வேண்டாம். புது முயற்சிகளைப் புது வருடந் தொடங்கும்வரை பின்போடுதல் நன்று.

**கும்பராசி அவிட்டம் 3, 4ப் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் உம்முடைய விஷயங்களில் திருத்தம் நிச்சயம், நல்ல காலம் எதிரில் வருகின்றது. ஆனல் சில நட்டங்களை அணிமையில் நிவாரணஞ்செய்யக் கஷ்டமாயிருக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

கற்பனை செய்து காசு பெறக் கூடும். நண்பரிடமிருந்து நல்ல புதினங்களுக்குமிடமுண்டு. புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரும். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.

---

# யாழ்ப்பாண நகரசபை

## பிரசித்த ஏல விற்பனவு

1953 ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் 1953 ம் ஆண்டு மார்கழிமாதம் 31ம்திகதி வரைக்கும் கீழ்க் காட்டப்பட்டிருக்கும் சந்தைகளில் வாடகைப்பணம் அறவிடப்படும் உரித்தைக் குத்தகையாகக் கொடுக்க 1952-ம் ஆண்டு மார்கழி மாதம் 19ம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு இதில் குறிக்கப்பட்டிருக்கும் சந்தைகளில் பிரசித்த ஏலத்திற் கூறப்படும்.

### சந்தைகளின் விபரம்

1. செங்குந்தர்ச்சந்தை இரண்டு அறைகள் உட்பட, சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கடை பிறநீங்கலாக.

2. முத்திரைச்சந்தை தற்காலிகமாக இருக்கும் தேனீர்க்கடை பிறநீங்கலாக.

### ஏல விற்பனவின் முறைகளும் நிபந்தனைகளும்

1. செங்குந்தர்ச் சந்தையின் கூடிய கேள்விக்காரரன் விற்பனையின் பின் ரூபா 500/= (ஐந்நூறு) உடன் கட்டவேண்டும். கேள்வித் தொகையின் மூன்றிலொரு பங்கு மூன்று நாளைக்குள் கட்டி விடவேண்டும். மீதித் தொகையை எட்டுச் சம பங்குகளாகப் பிரித்து ஒவ்வோர் மாதமும் 15 ம் திகதியன்று அல்லது அதற்கு முன் கட்டப்பட வேண்டும். முதற் கட்டுப் பணம் 1953 ம் ஆண்டு தை மாதம் 15 ம் திகதியிலோ அல்லது அதற்கு முன்போ கட்டுப்பட வேண்டும்.

மிகுதிப் பணத்திற்குப் பிணையாகத் தமது சொந்தச் செலவில் தமது உண்மையான காணியை ஈடாகக் கொடுத்து நொத்தாரிஸ் மூலம் பிணை உறுதி முடித்துக் கொள்ளவேண்டும்.

2. முத்திரச்சந்தையின் கூடிய கேள்விககாரன் விற்பனையின் பின் ரூபா 150/= (நூற்றி ஐம்பது) உடன் கட்ட வேண்டும். மீதித் தொகையை 26-12-52 க்குள் செலுத்தவேண்டும்.

கேள்விக்காரர் கட்டவேண்டிய தொகையைக் கட்டவும் மேற் கூறியபடிநொத்தாரிஸ்மூலம் பிணை உறுதி முடிக்கவும் தவறுமிடத்து அவரவர் கட்டிய பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்ப விற்கப்படும்.

வேறு விபரங்களை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கா. சண்முகம்
கொம்மிஷனர்,

நகரசபைக்கந்தோர்,
யாழ்ப்பாணம், 10-12-52,

G. 49 12—12—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் இல. 8050

சோப்பாய் தெற்கு, இராமலிங்கம் கைம்பெண் பொன்னம்மா —வழக்காளி.

எதிராக,

1. இருபாலை தற்போது புதுச் செம்மணித் தெரு நல்லூர் சபாபதி தம்பிராசா.

2. இருபாலை - தற்போது நீர்வேலிக்கந்தசுவாமிகோவிலடி வட ஒழுங்கை நீர்வேலி சபாபதி மகள் அன்னம்மா,

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 8050 - ம் இலக்க வழக்கில் எனக்கு இடப்பட்ட கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்பட்ட காணி 1953 ம்ஆ தைமீ 10 - ம் திகதி சனிக்கிழமை மூற்பகல் 9 மணி தொடக்கம் அக்காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 1534. இன்னும் ரூபா 1000 - க்கு 1951ம்ஆ ஆவணிமீ 13 - ந்உ தொடக்கம் 1951 - ம் ஆ மார்கழிமீ 13உ வரை 9 வீதம் வட்டியும் அதன் பின்பு முழுத் தொகைக்கும் 1951 - ம்ஆ மார்கழிமீ 13 ம்உ தொடக்கம இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும் அதாவது,

| | | |
|---|---|---|
| சென்ற செலவு | ரூபா. | 143-80 |
| இந்த வெலியாத்துச் செலவு | ரூபா. | 38-90 |
| பின் செலவு | ரூபா. | 20-15 |

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று இருபாலை இறை பெரிய கள்ளி அடைப்பு நிலப்பரப்பு இரண்டு குளி ஒன்பதும் பதினாறில் ஒன்பது பங்கும் (கி பர 2 குளி $9\frac{9}{16}$) வீடும் கிணறும வான்பயிர் செய்பயிர்களும், செற்கே இருக்கும் காணியில இருக்கும் கிணறறில் இதற்குரிய கிணற்றுப் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்புரிததும், எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு அப்பார்குட்டி பெண் விசாலாட்சிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு சுதிரிதம்பி கந்தையாவுக்கும் சகோதாரகளுக்குமுரிய வாதனம. இதடங்கல்ல் மேற சொல்லப்பட்ட கிணற்றுக்கு மேறசெலலைக் காணிக்காரர் போக்கு வரவு செய்யும் பாதையும் வழி வாய்க்காலும் புறநீங்கலாக மிகுதியடங்கலும்.

பொன்னம்பலம் அப்பையா

கொம்மிஷனர்

கொக்குவில் கிழக்கு

9—12—1952.

M. 190 12—12—52.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. 8247

வண்ணார்பண்ணை கிழக்கு. கந்தையா கோபாலபிள்ளை பெண் (கோட்டுச் சட்டத் தீர்ப்பின்படி விவாகரத்துச் செய்யப்பட்டிருக்கும்) மனோன்மணி பொன்னம்பலத்தின் மகள்.

— வழக்காளி.

எதிராக

நாயன்மார்காடு நல்லூர்.

1. ஆறுமுகம் கந்தையா.
2. பெண் தங்கமுத்து.
3. செல்லப்பா வாலசுந்தரம்
4. பெண் அன்னபூரணம்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8247 - ம் இலக்க வழக்கில் எனக்கு இடப்பட்ட கோட்டுச் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப் படும் காணிகள் 1953-ம்ஆ தைமீ 10-ம்உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம அவ்வக் காணிகளுக்குள் வைத்து பிரசித்த வலத்தில விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 1215ம் இன்னும் ரூபா1000க்கு1951ம்ஆ ஐப்பசிமீ 9 - ம்உ தொடக்கம் 1952 ம்ஆ தைமீ 10 - ம் திகதி வரை 6 வீதம் வட்டியும் அதன் பின்பு முழுத் தொகைக்கும் 1952 - ம்ஆ தைமீ 10 - ம்உ தொடக்கம் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவும், அதாவது,

| | | |
|---|---|---|
| சென்ற செலவு | ரூபா. | 153 35 |
| இந்த வெலியாத்துச செலவு | ரூபா. | 51-90 |
| பின் செலவு | ரூபா. | 18-05 |

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று இருபாலை இறை கோரன்குளி செற்பரப்பு ஆறு (செ பர6) எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் இராசம்மாவினுசனம் வடக்கு கீளே சொல்லப்படும ஆதனம, தெற்கு சுவாமிநாதர் செல்லையாவுகரும முத்தையா சவாரத்தினத்திறகு முரிய வாதனம்.

2. ஷை இருபாலை இறை கோரன் குளி செறபரப்பு ஒன்பது. இதில் தெற்குப் பக்கமாக செற பரப்பு நாலரை (செ பர $4\frac{1}{2}$) எல்லை கிழக்கு மயில்வாகனம் கைம்பெண் இராசம்மாவினுதனம், வடக்கு மிருதியாதனம் மேற்கு பாமு பொன்னம்பலத்தினுதனம் தெற்கு மேலே விபரிக்கப்பட்ட வாதனம். இதடங்கலிற் சொரியலாய் அலரவாசி.

பொன்னம்பலம் அப்பையா

கொம்மிஷனர்

கொக்குவில் கிழக்கு

9—12—1952.

M. 188 12—12—52.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல: 8121.

கொக்குவில் மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளை பொன்னையா —வழக்காளி.

எதிராக

உரும்பிராய் வடக்கு அருளம்பலம் தருமலிங்கம்

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில 8121 ம் இலக்க வழக்கில் எனக்கு இடப்பட்ட கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப் பட்ட காணிகள் 1953 ம் ஆ தைமீ 11ம் உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம அவ்வக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 1433ம் இன்னும் ரூபா 1250 க்கு 1951 ம் ஆ புரட்டாதி மீ 1 ம் உ தொடக்கம் 1951ம் ஆ மார்கழிமீ 13 உ வரை 8 வீத வட்டியும் அதன் பின்பு முழுத் தொகைக்கும் 1951 ம் ஆ மார்கழிமீ 13ந் உ தொடக்கம இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

அதாவது:

| | ரூபா. சத. |
|---|---|
| சென்ற செலவு | 131 90 |
| இந்தவெலியாத்துச் செலவு | 36 82 |
| பின் செலவு | 18 57 |

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று உரும்பிராய் இறை சொட்டி நிலப் பரப்பு முப்பத்துநாலு குளி பத்நாலரையும் (கி பர 34 குளி $14\frac{1}{2}$) எல்லை கிழக்கு வயிரவி இராமலிங்கத்தினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கும் தெற்கும் ஆறுமுகம் முத்துவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் மூன்றில் ஒருபங்கு($\frac{1}{3}$)

(2) ஷை இறை ருசாட்டி அல்லது வாரசாட்டி நிலப்பரப்பு முப்பது. எல்லை கிழக்கு இராசையாவுக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரியவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு சிவகுருவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம. தெற்கு சின்னத்தம்பிக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரியவாதனம.

இதடங்கலிற் சொரியலாய் நிலப் பரப்பு பத்து (கி. பர. 10)

பொன்னம்பலம் அப்பையா

கொம்மிஷனர்

கொக்குவில் கிழக்கு,

9-12-1952.

M. 189 12—12—52.

## சமுக நலனுக்கு ஒழுக்கம் வேண்டும்

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

வாழ்வில் மனிதன் தன்னலம் முதலியவற்றை விட்டுப் பிறர் நலம் பேணல ஒற்றுமை முதலிய ஒழுக்க நெறிகளை மேற்கொள்ள வேண்டியவனுனன். காலடைவில் ஒழுக்க உணர்வும் அவனது பண்புகளுள் ஒன்ருக அமைந்தது.

மனிதனது வரலாற்றின் ஒவ்வொரு நிலையிலும், தன்னலத்திற்கும் சமூக நலத்திற்கும் உரிய போராட்டம் நிகழ்ந்து வருகிறது. தன்னலம் வெல்லும்போது மனிதன் ஒழுக்கத்தின் வரம்பை மீறிவிடுகிருன். சமூகநலன் வெல்லும் போது ஒழுக்கம் [illegible] கனியும் [illegible].

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

லச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து வைக்கப்படும் வட்டியாக முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் ஆராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ருணிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்

தங்கமாளிகை

கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப்பெரிய நகை வியாபாரிகள்

=O=

தந்தி: "JEWELLERS"

போன்: 161.

கிளைத்தானம்:

63, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய ○●○

சி. எம். சாமி

தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.

இதற்கு நிகராவமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும. நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I

(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday. December 12 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org